மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 119/2020

பெயர் : பழனிசாமி
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 11.08.2026

---

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பு)**

1. வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என்ன எதிரவழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. எனது நிரூபன வாக்குமூலத்துடன் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்துரிமை சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது சொத்தும் வாதியின் சொத்தும் ஒரே சொத்தா என்றால் இல்லை. வாதிக்கு அவரது தாயார் எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி அவருக்கு 82 செண்ட் பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் சொத்திற்கு மின் இணைப்பு பெறுவதற்காக அவரது பூமியில் மின் உயர் கம்பம் நடப்பட்டுள்ளது என்றால் அவர் பூமியில் நடவில்லை எனது பூமியில் தான் நட்டுள்ளார்கள். நான் சொல்வது தவறு என்றும் வாதியின் பூமியில் மின் உயர் கம்பம் நட்டுள்ளதால் தான் அவருக்கு மின்சார துறை 6 லட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் மின்சார துறை 6 லட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கியுள்ளது என்றும், அதில் சரிபாதி தொகையை வாதிக்கு அளிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா பொங்கிய கவுண்டரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொங்கிய கவுண்டரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாமல் எனது முதல் விசாரணை சாட்சிய சங்கதிகள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

4. நான் சுப்பாத்தாள் மகன் என்பதற்கு அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுப்பாத்தாளின் வாரிசு நான் இல்லை

என்பதால் தான் என்னால் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல என்னிடம் வாரிசு சான்றிதழ் உள்ளது வேண்டுமென்றால் தாக்கல் செய்வேன். பொங்கிய கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்றும், அதில் முதல் மனைவிக்கு பிறந்தவர் கருப்பகவுண்டர் என்றும், மேற்படி கருப்ப கவுண்டருக்கு 3 மகன்கள் மற்றும் 3 மகள்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வீரம்மாள் என்பவர் கருப்ப கவுண்டரின் மகள் என்றால் சரிதான்.

5. கருப்பகவுண்டர் கடந்த 25.09.1985ம் தேதியில் தனது மகள் வீரம்மாள் பெயருக்கு 1651/1985 என்ற எண்ணுள்ள ஆவணம் மூலம் அவருக்கு பாத்தியப்பட்ட 1.64 ஏக்கரில் 82 செண்ட் பூமியை வா.சா.ஆ.1 செட்டில்மெணட் ஆக எழுதிவைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீரம்மாள் பெயருக்கு கருப்பகவுண்டர் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும், தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. மேற்படி 1985ம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வீரம்மாள் தனது மகளான வாதி பெயருக்கு வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும், மேற்படி விவரங்களை தெரிவித்து தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி விவரங்கள் தெரிந்தும், நான் வேண்டுமென்றே எனது முதல் விசாரணை சாட்சியத்தில் 1985ம் ஆண்டு வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி குறிப்பிடாமல் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. கருப்பசாமி கவுண்டர் அவரது மகளான வீரம்மாள் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைக்க அவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. ஏன் கருப்ப கவுண்டருக்கு உரிமை இல்லை என்று சொல்கிறேன் என்றால் 1931ம் ஆண்டு வள்ளியப்ப செட்டியாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்பதை தெரிவிக்காமல் கருப்ப கவுண்டர் வீரம்மாள் பெயருக்கு எழுதி வைத்துள்ளார் எனவே, அவருக்கு எழுத உரிமையில்லை.

8. 1985 ம் ஆண்டுக்கு முன்பிலிருந்து கருப்பசாமி கவுண்டர் க.ச.512 காலையில 1.64 ஏக்கர் பூமியை அனுபவித்து வந்தார் என்றும், அதில் தான் 82 செண்ட் பூமியை வீரம்மாள் பெயருக்கு எழுதி வைத்துள்ளார் என்றும், அவ்வாறு எழுதுவதற்கு அவருக்கு உரிமை உண்டு என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்று நானோ, எனது வாரிசுகளோ நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

9. 2004 ம் ஆண்டு நாங்கள் செய்துகொண்ட பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரம் செய்துகொள்வதற்கு முன்பாக சொத்துக்கள் சம்மந்தமான வில்லங்க சான்றுகள் போட்டு பார்த்தோமா என்றால் இல்லை. நாங்கள் வில்லங்க சான்றுகள் போட்டு பார்த்தோம் என்றும், அப்போது 1985 ம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணம் பற்றிய குறிப்பு இருந்ததை தெரிந்தும் நாங்கள் பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.

10. வீரம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி அனுபவித்து வரும் 82 செண்ட் பூமி நீங்கலாக மீதம் உள்ள சொத்தினை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் நான் தான் அனுபவித்து வருகிறேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் 82 செண்டை அனுபவித்து வருகிறேன் என்றால் 2004 ம் ஆண்டு பாகப்பிரிவினையின் படி அனுபவித்து வருகிறேன்.

11. எனது அப்பா நடராஜகவுண்டருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் நானும் கிருஷ்ணசாமி என்பவரும் மகன்கள், வள்ளியம்மாள், வெள்ளையம்மாள் மற்றும் வள்ளியம்மாள் என்கிற சின்னகுட்டி ஆகிய 3 மகள்களும் வாரிசுகள் ஆவோம். 1932 ம் ஆண்டு பாகக்பிரிவினை பத்திரம் மற்றும் பின்னிட்டு எனது தந்தையோ, சுப்பாத்தாள் பெயரிலோ வாங்கப்பட்ட சொத்துக்களுக்கு நாங்கள் 5 பேரும் தான் வாரிசுகள் என்றால் சரிதான்.

12. பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் நானும் எனது சகோதரர் கிருஷ்ணசாமி இருவர் மட்டுமே வாரிசுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனறால்

சரிதான். நான் எனது சகோதரிகள் மூவரையும் சேர்க்காமல் செய்து கொண்ட பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரமே செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் அவர்களுக்கு வேறு சொத்துக்கள் கொடுத்துள்ளோம். எனது சகோதரிகள் மூவரும் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. நான் சொல்வது தவறு என்றும், எனது சகோதரிகளுக்கு எந்த சொத்தும் நாங்கள் கொடுக்கவில்லை என்றும் அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

13. வாதி குடியிருக்கும் வீட்டிற்கும், சொத்திற்கும் வெகு தொலைவு உள்ளது என்பது தவறு என்றும், தற்போது உள்ள காலகட்டத்தில் அரைமணி நேரத்தில் சொத்திற்கு செல்ல முடியும் அவரது உறவினர்களும் சொத்தினை பராமரித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. க.ச.512 காலையில் வாதிக்கு சரிபாதி உரிமை உள்ளது என்றும், அதனை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான எதிர்வாதங்களுடன் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

14. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 பட்டாவின் படி எனக்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என்றால் 82 செண்ட் பாத்தியம் ஆகும். தாவா சொத்தில் அமைத்துள்ள மின் உயர் கம்மபங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகையை வாதியிடம் அளிப்பதை தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

KALIDASAN VEERASAMY
Digitally signed by KALIDASAN VEERASAMY
Date: 2026.08.11 18:16:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.